بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 04/11/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# தஹ்ரீக்கே ஜதீதுடைய 88 ஆம் ஆண்டில் ஜமாஅத்தினர்கள் சார்பாக செய்யப்பட்ட பொருள் தியாகங்கள் பற்றிய நற்குறிப்பும், 89 ஆம் ஆண்டின் துவக்கம் குறித்த அறிவிப்பும்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ. أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ.

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

இன்று நவம்பர் உடைய முதல் ஜுமுஆவாகும். வழக்கம்போல் இன்றைய குத்பாவில் தஹ்ரீக்கே ஜதீதுடைய புதிய வருடத்திற்கான அறிவிப்பு செய்யப்படுகின்றது. கடந்த வருடத்தில் அல்லாஹ் பொழிந்துள்ள அருள்களின் மழையைக் குறித்து எடுத்துரைக்கப்படுகின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஒவ்வொரு நபியும் தமது குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக பொருள் தியாகம் செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளார்கள்.

திருக்குர்ஆனிலும் பொருள் தியாகத்தின் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. நீங்கள் செய்கின்ற தியாகங்களுக்கு பிரதிபலனாக அல்லாஹ் இவ்வுலகிலேயே வெகுமதிகளை வழங்குகிறான் என்று திருக்குர்ஆனில் அல்லாஹ் தெளிவாக கூறிவிட்டான். உதாரணமாக, சூரா பகராவின் 262 ஆம் வசனத்தில் தன் வழியில் செலவழிப்பவர்களுக்கான உதாரணத்தை எடுத்துரைத்தவாறு, நம்பிக்கை கொண்டோர் எவர்களெல்லாம் கலப்பற்ற முறையில் அல்லாஹ்வின் வழியில் செலவழிக்கிறார்களோ அவர்களின் கடனை அல்லாஹ் தன் மீது வைத்துக் கொள்வதில்லை. மாறாக, உலகிலும் மறுமையிலும் அளவற்ற முறையில் வழங்குகிறான் என்று கூறியுள்ளான்.

இக்காலத்தில் அல்லாஹ், மார்க்கத்தைப் பரப்புவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை அனுப்பி வைத்துள்ளான். மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும் ஏகத்துவத்தை நிலை நாட்டுவதற்காகவும் தம் கடமையை நிறைவேற்ற வேண்டியது அன்னாரை ஏற்றுக் கொண்டவர்கள் மீது உள்ள பொறுப்பாகும்.

கலப்பற்ற முறையில் அவனது உரிமையை செலுத்தினால் அவர்கள் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக ஆவார்கள்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:** தொழுகை நோன்பு மற்றும் அல்லாஹ்வை நினைவு கூர்வது ஆகியவை அல்லாஹ்வின் வழியில் செலவழித்த செல்வத்தைப் பல மடங்கு அதிகமாக ஆக்குகின்றது.

இந்த ஹதீஸில் ஓர் உண்மையான நம்பிக்கையாளருடைய தோற்றம் படம் பிடித்து காட்டப்பட்டுள்ளது. அதாவது, பொருள் தியாகம் செய்வது மட்டும் போதுமானது கிடையாது! மாறாக இதர இபாதத்துகளும் அவசியமாகும். பிறகு அல்லாஹ் எந்த அளவு வழங்குவான் என்றால், மனிதன் வியப்படைந்து விடுகின்றான். மேலும், நாம் இந்த அளவு தியாகம் செய்துவிட்டோம் என்று மனிதன் மகிழ்ச்சியடைந்து விடக் கூடாது. மாறாக இதர இபாதத்துகளையும் செய்ய வேண்டியது அவசியமாகும்.

*இதன் பிறகு ஹுஸூர் அவர்கள் ஹஸ்ரத் ராபிஆ பஸரி அவர்களுக்கு இறைவன் மீது இருந்த முழுமையான நம்பிக்கை குறித்த சம்பவத்தை எடுத்துரைக்கும்போது, அவர்கள் இறை வழியில் இரு ரொட்டிகளைக் கொடுத்தார்கள். அதன் காரணமாக விருந்தினர்களுக்கு 20 ரொட்டிகள் வந்தன என்று கூறினார்கள்.*

இன்று மார்க்கத்தின் நோக்கத்தை முழுமைப்படுத்துவதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பி வைத்துள்ளான். ஜமாஅத்தின் மூலமாக மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அல்லாஹ்வின் அருளால் ஒவ்வொரு வருடமும் ஜமாஅத் பல மில்லியன் பவுண்டு தொகையை நூல்களை அச்சடிப்பதற்காகவும், பள்ளிவாசல்கள் மற்றும் மிஷன் ஹவுஸ்கள் ஆகியவற்றைக் கட்டுவதற்காகவும் செலவழிக்கின்றது. முன்னேற்றமடைந்த நாடுகளின் பெரும்பான்மையான தொகை ஆப்பிரிக்கா, இந்தியா மற்றும் இதர ஏழை நாடுகளில் செலவழிக்கப்படுகின்றது. வாழ்வாதாரத்தின் நிலை மோசமாக இருக்கக்கூடிய இந்நிலையிலும் ஜமாஅத்தினர்கள் இந்த செலவுகளையும் பூர்த்தி செய்கின்றனர். இது அல்லாஹ்வுடைய சிறப்பான அருளே ஆகும்! அல்லாஹ்வும் தனது நடைமுறையின் காட்சிகளை அவர்களுக்கு காட்டுகின்றான். ஏழை நாடுகளிலும், பணக்கார நாடுகளிலும், ஒவ்வோர் இடங்களிலும் தியாகம் செய்யக்கூடியவர்களுக்கு வினோதமான முறையில் வழங்குகிறான்.

*இதன் பிறகு ஹுஸூர் அவர்கள் லைபீரியா, ஆஸ்திரேலியா, தன்சானியா, கேம்பியா, நைஜர், ஃகினிகனாக்ரி, இந்தியா மற்றும் உலகெங்கிலும் பல்வேறு நாடுகளைச் சார்ந்த ஆண்கள், பெண்கள், வயோதிகர்கள், சிறு வயதுடைய பிள்ளைகள், செல்வந்தர்கள்,*

*ஏழைகள் - சுருக்கமாக பல்வேறு தரப்பட்ட, பல்வேறு வகைப்பட்ட சமுதாயங்களைச் சார்ந்த தூய அஹ்மதிகளின் பொருள் தியாகங்களின் ஈமானுக்கு வலுவூட்டும் சம்பவங்களை எடுத்துரைத்தார்கள்.*

**இந்தியாவில் இருந்து வக்கீலுல் மால் சாஹிப் கூறுகிறார்கள்:** இங்கு ஒரு நண்பர் உள்ளார். தஹ்ரீக்கே ஜதீது பொருள் தியாகத்தில் மிகவும் முன்னணியில் இருக்கின்றார். பட்ஜெட்டை அதிகரிக்குமாறு அவரிடம் கூறப்பட்ட போது, எவ்வளவு அதிகரிக்க வேண்டும் என்று அவர் கேட்டார். உங்களுடைய வருமானத்திற்கு ஏற்ப உங்களால் இயன்ற அளவு நீங்கள் அதிகரித்து விடுங்கள் என்று கூறப்பட்டது. ஆனால் அவர் தலைமையகத்தினுடைய பிரதிநிதியிடம், நீங்களே கூறுங்கள் எவ்வளவு அதிகரிக்க வேண்டும் என்று பிடிவாதமாக கேட்டார். 10 லட்சம் ரூபாய் அதிகரித்து விடுங்கள் என்று பிரதிநிதி அவரிடம் கூறினார். அவர் ஏற்கனவே 5 லட்சம் ரூபாய் கொடுத்திருந்தார். அவர் தனது பட்ஜெட்டை அதிகமாக்கினார்; அதை செலுத்தியும் விட்டார். அவர் கூறுகின்றார்: 'எனது ஒரு வீடு இருந்தது. அதனுடைய ரிஜிஸ்ட்ரேஷன் நடக்காமல் இருந்தது. மிகப் பெரிய அளவில் நஷ்டம் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருந்தது. ஆனால் பட்ஜெட்டை அதிகரித்த சில நாட்களிலேயே நிலுவையில் இருந்த அந்த வேலையும் நடந்து விட்டது. அந்த நஷ்டத்தை அல்லாஹ் சரி செய்து விட்டான்.'

ஆகவே அல்லாஹ் செல்வந்தர்களின் கடனையும் தன் மீது வைத்திருப்பதில்லை! ஏழைகளின் கடனையும் வைத்திருப்பதில்லை! ஒவ்வொருவருக்கும் அவருக்கு ஏற்ப வழங்கி விடுகின்றான்.

**இந்தியாவிலிருந்தே இன்னொரு சம்பவம்.** வக்கீலுல் மால் சாஹிப் எழுதுகிறார்கள்: காஷ்மீரைச் சார்ந்த ஒரு டாக்டர், ஷேரே காஷ்மீர் யூனிவர்சிட்டியில் பேராசிரியர் ஆக உள்ளார். அவர் தமது வாக்குறுதிக்கேற்ப செலுத்தி விட்டார். அவர் கூறுகின்றார்: 'அதன் பிறகு எனக்கு பதவி உயர்வு வழங்கி தலைமை விஞ்ஞானி ஆக என்னை ஆக்கி விட்டார்கள். என்னுடைய சம்பளமும் அசாதாரணமாக அதிகரித்து விட்டது.' ஆகவே அவர் தமது தஹ்ரீக்கே ஜதீதுடைய சந்தாவையும் அதிகமாக்கி விட்டார்.

**தஹ்ரீக்கே ஜதீதுடைய 88 வது வருடம் முடிவடைந்துவிட்ட நிலையில், நடப்பாண்டில் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இந்தப் பொருளாதார அமைப்பின் மூலமாக 16.4 மில்லியன் பவுண்டு பொருள் தியாகம் செய்வதற்கு நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. அல்ஹம்துலில்லாஹ்!** மிக வேகமாக சீர் குலைந்து வரும் உலகின் பொருளாதார நிலையிலும்கூட கடந்த வருடத்தை விட இந்த வசூல் அல்லாஹ்வின் அருளால் 1.1 மில்லியன் பவுண்ட் அதிகமாகும்.

முன்பை போலவே **இவ்வருடமும் ஜெர்மனி ஜமாஅத் உலகெங்கிலும் முதல் இடத்தில் உள்ளது. பாகிஸ்தானும் அல்லாஹ்வின் அருளால் மிக அதிக தியாகத்தை செய்துள்ளது.** ஆனால் அங்கு பொருளாதார நிலை மிக மோசமாக உள்ளது. பண மதிப்பு வீழ்ச்சி அடைந்துள்ளதன் காரணமாக அவர்கள் தரவரிசையில் பின்தங்கி விட்டார்கள். மற்றபடி தியாகத்தைப் பொருத்தவரை அவர்கள் முன்னேறிச் சென்றிருக்கிறார்கள். ஜெர்மனி முன்னால் உள்ளது. ஆனால் உள்ளூர் கரன்சியைப் பொருத்தவரை அவர்களிடத்தில் குறைவு ஏற்பட்டுள்ளது. **பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் எந்த அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதோ, அவர்கள் அதேபோன்று முன்னேற்றம் அடைந்து கொண்டே சென்றால் ஜெர்மனியை விடவும் முந்திச் செல்ல முடியும். அவ்வாறே, கனடா, ஆஸ்திரேலியா, இந்தியா, கானா ஆகியவற்றின் ஜமாஅத் சந்தாக்களிலும் நன்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.**

**நன்கு பணியாற்றிய ஜமாஅத்தைப் பொருத்தவரை எடுத்துக் கூறத் தகுந்த பிற ஜமாஅத்துகளில்,** ஹாலந்து, ஃபிரான்ஸ், ஸ்வீடன், ஜார்ஜியா, நார்வே, பெல்ஜியம், பர்மா, மலேசியா, நியூசிலாந்து, பங்களாதேஷ், கிரிபாத்தி, கஸாகிஸ்தான் ததாரிஸ்தான், ஃபிலிப்பைன்ஸ், மத்திய கிழக்குச் சார்ந்த ஒரு ஜமாஅத் ஆகியவை உள்ளன.

ஆப்பிரிக்க நாடுகளில் ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் முன்னணியில் இருக்கக்கூடிய ஜமாஅத் கானா ஆகும். பிறகு மொரீஷியஸ், நைஜீரியா, புர்கினா பாசோ, தன்சானியா, கேம்பியா, லைபீரியா, யுகாண்டா, சேராலியோன், பெனின் ஆகியவை உள்ளன.

**தனி நபர் சந்தாவைப் பொருத்தவரை அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவற்றின் தரவரிசை உள்ளது.** அல்லாஹ்வின் அருளால் சந்தா கொடுப்பவர்களின் மொத்த எண்ணிக்கை 15 லட்சத்து 94 ஆயிரம் ஆகும்.

சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கையை அதிகரித்ததில் ஆப்பிரிக்க நாடுகளில் நைஜீரியா முதலிடத்தில் உள்ளது. பிறகு கினி பஸாவு, காங்கோ பிராஸ்வீல், கினிகனாக்ரி, தன்ஸானியா, காங்கோ கின்ஷாஸா, கேம்பியா, கேமரூன், ஐவரிகோஸ்ட், நைஜர், செனிகால் மற்றும் புர்கினோஃபாஸோ ஆகியவை உள்ளன.

**அல்லாஹ்வில் அருளால் முதல் அலுவலக பதிவேட்டில் உள்ள அனைவரது சந்தா கணக்குகளும் தொடர்கின்றன.**

**இந்தியாவின் முதல் 10 ஜமாஅத்துகள்:** கோயம்பத்தூர் - தமிழ் நாடு முதல் இடத்தில் உள்ளது. பிறகு, காதியான், ஹைதராபாத், கருளாயி, பத்தபிரியம், காலிகட், பேங்களூர், மேலப்பாளையம், கல்கத்தா, கேரங் ஆகியவை.

**தியாகத்தின் அடிப்படையில் இந்தியாவில் முதல் 10 இடங்களில் உள்ள மாநிலங்கள்:** கேரளா, தமிழ் நாடு, கர்நாடகா, ஜம்மு காஷ்மீர், தெலுங்கானா, ஒடீசா, பஞ்சாப், பெங்கால், டில்லி, மகாராஷ்ட்ரா ஆகியவை.

*தியாகம் செய்யக்கூடிய அனைவரின் செல்வத்திலும் உயிரிலும் அல்லாஹ் அளவற்ற பரக்கத்தை வழங்குவானாக! என்று ஹுஸூர் அவர்கள் தியாகம் செய்த அனைவருக்காகவும் துஆ செய்தார்கள். குத்பாவின் இறுதியில் ஒரு வெப்சைட்டை தொடங்கி வைப்பது தொடர்பாக அறிவித்தவாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:*

யுகே உடைய ஜமாஅத் பிரிட்டனின் ஜமாஅத் வரலாறு தொடர்பாக ஒரு புதிய வெப்சைட் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இந்த வெப்சைட்டில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேற்கத்திய நாடுகளில் செய்த பிரச்சார பணிகள், வழிகாட்டல்கள், முயற்சிகள் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் உள்ளன. யூ.கே உடைய ஜமாஅத் வரலாறு 1913 ஆம் ஆண்டு ஆரம்பித்ததாகப் புரியப்பட்டுள்ளது. அப்பொழுது இங்கு சவுத்ரி ஃபத்ஹ் முஹம்மது சாஹிப் சய்யால் (ரலி) அவர்கள் வருகை தந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தூதுச் செய்தியோ, யூ.கே மற்றும் ஐரோப்பா ஆகியவற்றின் பிற நாடுகளில் அன்னார் முஜத்தித் என்று வாதம் செய்த அந்த காலத்திலேயே வந்தடைந்து விட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சான்றை முழுமைப்படுத்துவதற்காக ஒரு கடிதத்தையும், அத்துடன் எட்டாயிரம் எண்ணிக்கையில் ஆங்கிலத்தில் ஒரு பிரசுரத்தையும் அச்சடித்து இந்தியாவிலும், இங்கிலாந்திலும் இருந்த பிரபல்யமான கண்ணியத்திற்குரிய பாதிரிமார்களுக்கும், பல்வேறு சொசைட்டிகளுக்கும், மார்க்க தலைவர்களுக்கும் அனுப்பி வைத்தார்கள். அந்தக் காலத்தில் எங்கெல்லாம் இதை அனுப்பி வைக்க இயலுமோ அங்கெல்லாம் அனுப்பி வைத்தார்கள். அதனுடைய ஓர் உதாரணம், யூ.கே -வில் சார்லஸ் பிரெட்லா என்ற பெயருடைய ஓர் அரசியல்வாதிக்கு - அவர் நாத்திகராக இருந்தார். அவருக்கு 1885 ஆம் ஆண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றது. அதனுடைய செய்தி இங்குள்ள செய்தித்தாளான 'கோர் கான்ஸ்டிடியூஷன்' -ல் 8 ஜூன் 1885 ஆம் இதழில் வெளியானது. அதேபோன்று தி தியோஸோஃபிஸ்ட் உடைய தோற்றுனரான ஹென்றி ஸ்டீல் ஆல்காட் -க்கும் 1886 ஆம் ஆண்டு அழைபிதழ் கிடைக்கப் பெற்றது. அந்தச் செய்தி அவருடைய பத்திரிக்கையான 'தி தியோஸோஃபிஸ்ட்' -ல் செப்டம்பர் 1886 உடைய இதழில் வெளிவந்தது.

இந்த வெப்சைட்டில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அருளுக்குரிய காலகட்டத்தின் ஒரு டைம் லைன்

உருவாக்கப்பட்டுள்ளது. அதில் மேற்கத்திய நாடுகளுக்குக் கொடுக்கப்பட்ட உண்மைச் செய்தி என்ற தலைப்பில் உண்மை கட்டுரை இடம்பெற்றுள்ளது. அத்துடன் **'Pioneer Missionary'** என்ற பெயரிலும் ஒரு டைம் லைன் உருவாக்கப்பட்டுள்ளது. அதில் இயக்கத்தின் ஆரம்பகால முபல்லிக்களின் அறிமுகமும், யூ.கேவில் அவர்கள் ஆற்றிய தொண்டுகள் பற்றிய குறிப்புகளும் உள்ளன. அவர்களுள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபிகளும் அடங்குவர். அவ்வாறே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பாதிரி பிஃகட் தொடர்பாக செய்த முன்னறிவிப்பும் உள்ளது. அது, அனைத்து சான்றுகளையும் உள்ளடக்கிய ஓர் ஆய்வுக் கட்டுரையாக வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறே, வரலாற்று ரீதியான ஆய்வுக் கட்டுரைகளும் அதில் வெளியிடப்பட்டுள்ளன. அதன் மூலமாக இளைஞர்களுக்கு, அவர்களும் அவர்களுடைய முன்னோர்களும் இந்த நாட்டுக்கு வந்ததன் அசல் நோக்கம் என்ன என்பது தெளிவாகி விடும். இந்த வெப்சைட் உடைய முகவரி, **history.ahmadiyya.uk** ஆகும்.

ஆக, இதுவும் இன்றிலிருந்து ஆரம்பமாகிறது. இது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டதுதான்! ஆனால் சம்பிரதாய ரீதியாக, முறையாக இதை இன்று ஆரம்பித்து வைக்க வேண்டும் என விரும்பியுள்ளனர். நம்மவர்களுக்கும், அந்நியர்களுக்கும் பயன் அளிக்கக் கூடியதாக அல்லாஹ் இதை ஆக்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ
وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ
ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி **A.P.A.** தாரிக் அஹமது)